# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (04.05.2024 முதல் 08.05.2024)

**அறிக்கை எண் 036/2024** **தேதி.03.05.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 30.04.24 முதல் 02.05.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 40°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 26°C முதல் 27°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 71 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 32 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-16 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (30.04.2024 முதல் 02.05.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30/04 | 01/05 | 02/05 | தேதி | நாள்-1 04/05 | நாள்-2 05/05 | நாள்-3 06/05 | நாள்-4 07/05 | நாள்-5 08/05 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 2 | 2 | 1 | 9 |
| 40 | 40 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 44 | 43 | 43 | 42 | 41 |
| 27 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 25 | 23 | 23 |
| 5 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 4 | 6 | 8 |
| 62 | 71 | 69 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 60 | 70 | 60 |
| 32 | 42 | 37 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 30 | 20 | 20 | 30 | 30 |
| 9 | 16 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 18 | 22 | 16 | 18 | 14 |
| 230 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (04.05.2024 முதல் 08.05.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 41°செ முதல் 44°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின்

ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 14-22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பெங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பெட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **04-05-2024** | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 |
| **05-05-2024** | 0.0 | 1.0 | 3.0 | 0.0 | 1.0 | 3.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 3.0 | 0.0 | 0.0 |
| **06-05-2024** | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 |
| **07-05-2024** | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 |
| **08-05-2024** | 7.0 | 9.0 | 9.0 | 10.0 | 8.0 | 10.0 | 9.0 | 7.0 | 7.0 | 6.0 | 9.0 | 8.0 | 10.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | தமிழகத்தின் வடமாவட்டங்களில் வெப்ப அலை போன்றுஅதிக வெப்பம் பதிவாகி வருகிறது. அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டலத்தில் ஈரோடு மற்றும் திருப்பூர் உள் மாவட்டப்பகுதிகளிலும் அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும். மேலும் 8 - 16 கி.மீ வேகமான காற்றுடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>கோவை மாவட்டத்தில் மட்டும் வெப்பம் சிறிது தணிந்து காணப்படும். மேலும் கோடைமழை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு மாலைநேரங்களில் நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும்.<br>தொடர்ந்து வறண்ட வானிலையுடன் அதிக வெப்பமும் காணப்படுவதால் கோழி மற்றும் மாடு கொட்டகைகளின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம் அல்லது நனைந்த கோணிப்பையை கூடாரத்தின் ஓரங்களில் தொங்கவிடுவதும் ஓரளவிற்கு நன்மை பயக்கும். |

**குறுஞ்செய்தி**

- உயர்ந்துவரும் வெப்பநிலை காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**